**12.06.2025**

**அ.வ.எண். 102/2022**

**வா.சா.1 - ஆறுமுகம், த/பெ. சின்னையன்**

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 12.06.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வாதிகள் மூன்று பேரும் சின்னையன் என்பவருக்கு வாரிசு என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் இறந்த தேதி சரியாக நினைவில்லை. என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் மூன்று பேரும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது பிரமாண வாக்குமூலத்துடன் நான் சொல்லியுள்ள மூன்று ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து எனது சொத்திற்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தா சின்னிய கவுண்டருக்கு 1960 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் ஏ-அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்பதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் டி-அட்டவணை சொத்து என சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஏ-அட்டவணை சொத்து தான்.

3. 1980 ம் ஆண்டில் என் தாத்தாவும், என் தகப்பனாரும், என் சித்தப்பா பழனிச்சாமியும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் என் தாத்தாவிற்கு ஏ-அட்டவணை சொத்தும், என் தந்தைக்கு பி-அட்டவணை சொத்தும், என் சித்தப்பாவிற்கு சி-அட்டவணை சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஏ-அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் என்றால் 1.5 ஏக்கர் ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் ஏ-அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தகப்பனாருக்கு பி-அட்டவணையில் 2 அயிட்ட சொத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் 1ம் அயிட்ட சொத்து 75 சென்ட், 2ம் அயிட்ட சொத்து 70 சென்ட் ஆகும். மேற்படி 2 அயிட்ட சொத்துக்களும் காலை எண்.277/2 ல் உள்ளது என்றால் சரிதான். மொத்தம் சர்வே எண்.277/2 ல், ஏக்கர் 1.45 சென்ட் ஆகும்.

5. என் சித்தப்பா பழனிச்சாமிக்கும் சி-அட்டவணை சொத்தில் 2 அயிட்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது. 1ம் அயிட்ட சொத்து அதில், 75 சென்ட், 2ம் அயிட்ட சொத்து 75 சென்ட் ஆகும். மொத்தம் அதில் ஏக்கர் 1.50 சென்ட் விஸ்தீரணம் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி என் தாத்தாவிற்கு 1 ஏக்கரும், என் அப்பாவிற்கு ஏக்கர் 1.45 சென்ட்டும், என் சித்தப்பாவிற்கு ஏக்கர் 1.50 சென்ட்டும் ஒதுக்கப்பட்டது என்றால் என் தாத்தாவிற்கு ஏக்கர் 1.47 சென்ட், என் அப்பாவிற்கு ஏக்கர் 1.45 சென்ட்டும், என் சித்தப்பாவிற்கு ஏக்கர் 1.50 சென்ட்டும் ஒதுக்கப்பட்டது.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட ஏ-அட்டவணை சொத்திற்கு 1 ஏக்கர் என்று குறித்துள்ளது என்றால் சரிதான், மற்றொரு அயிட்டத்தில் 47 சென்ட் உள்ளது. என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பி-அட்டவணையில் 2ம்அயிட்டம் 70 சென்ட் சொத்து என் தாத்தா சின்னியக் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட ஏ-அட்டவணை சொத்திற்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான்.

7. என்னுடைய சித்தப்பா பழனிச்சாமிக்கு ஒதுக்கப்பட்ட சி-அட்டவணை சொத்தில் 2ம் அயிட்டத்தில் 75 சென்ட் சொத்து என் தாத்தா சின்னியக் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட ஏ-அட்டவணை சொத்திற்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். என் அப்பாவுக்கு ஒதுக்கப்பட்ட முதல் அயிட்ட சொத்து 75 சென்ட்டும், என் சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட முதல் அயிட்ட சொத்து 75 சென்ட்டும், அருகருகே உள்ளது என்றால் சரிதான். என் சித்தப்பா சொத்து தென்புறமாக உள்ளது.

8. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில், என் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண்.277/2 ஒரு ஏக்கர், அவருடைய ஜீவதிசைக்கு பிறகு பாட்டி சுப்பம்மாளுக்கு வாழ்நாள் உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் பாட்டியின் பெயர் எனக்கு நினைவில்லை, நாங்கள் பார்த்தது இல்லை. மேற்படி பாகப்பிரிவினையில் தாத்தா இறப்புக்கு பின்னிட்டு சுப்பம்மாளின் வாழ்நாளிற்கு பிறகு என் தகப்பனாரும், என் சித்தப்பாவும் பிரித்து கொள்ள வேண்டியது என உள்ளது என்றால் இல்லை. என் தாத்தா காலமான பின்னிட்டு அவருக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் சொத்தை என் அப்பாவும், என் சித்தப்பாவும் பிரித்து கொள்ள வேண்டியது என உள்ளது.

9. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் தாத்தா இறப்புக்கு பின்னிட்டு சுப்பம்மாளின் வாழ்நாளிற்கு பிறகு என் தகப்பனாரும், என் சித்தப்பாவும் பிரித்து கொள்ள வேண்டியது என குறிப்பு உள்ளது என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் சொன்னவாறு ஏ-அட்டவணை சொத்தை என் தகப்பனாரும், என் சித்தப்பாவும் கூட்டாக அனுபவம் செய்து வருவதாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஏ-அட்டவணை சொத்தில் ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் சொத்தை என் தாத்தாவின் இறப்பிற்கு பின்னிட்டு என்னுடைய தகப்பனாருக்கு என் சித்தப்பாவிற்கும் தலா 50 சென்ட் வீதம் வரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி என்னுடைய தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பி-அட்டவணை சொத்தில் க.ச.எண்.277/2 காலையில் 2 அயிட்டங்களாக ஏக்கர் 1.45 சென்ட்டும், மற்றும் மேற்கண்ட 50 சென்ட் சேர்த்து மொத்தம் ஏக்கர் 1.95 சென்ட் என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியம் என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் என்னுடைய சித்தப்பாவிற்கு

ஒதுக்கப்பட்ட சி-அட்டவணை சொத்தில் க.ச.எண்.277/2 காலையில் 2 அயிட்டங்களாக ஏக்கர் 1.50 சென்ட்டும், மற்றும் மேற்கண்ட 50 சென்ட் சேர்த்து மொத்தம் 2 ஏக்கர் என் சித்தப்பாவிற்கு பாத்தியம் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய தகப்பனாருக்கு ஏக்கர் 2.05 சென்ட் ஒதுக்கப்பட்டது என சொல்லியுள்ளது தவறு என்றால் கிணறு மற்றும் வாரியை சேர்த்து சொல்லியுள்ளேன். மேற்படி குறிப்பை தாவா சொத்து விவரத்தில் குறிப்பு சொல்லவில்லை என்றால் சரிதான்.

12. 70 சென்ட் நிலத்தை 3ம் நபருக்கு வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் விற்றதாக சொல்லியுள்ள நிலையில் யாருக்கு, எப்போது விற்றோம் என சொல்லவில்லை என்றால் நினைவில்லை. என் தகப்பனார் உள்ள போது விற்றது. அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் ஏக்கர் 1.95 சென்ட்டிற்கு பதிலாக ஏக்கர் 2.05 சென்ட் என தவறுதலாக சொல்லியுள்ள விவரம் தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட ஏக்கர் 1.95 சென்ட்டில், 70 சென்ட் விற்பனை செய்தது போக மீதம் உள்ளது ஏக்கர் 1.25 சென்ட் என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு ஏக்கர் 1.50 சென்ட் பாகப்பிரிவினையில் பாத்தியம். என் தாத்தாவிற்கு ஏக்கர் 1.50 சென்ட் பாகப்பிரிவினையில் பாத்தியம் என்பதற்கு எந்தெந்த காலையில் எவ்வளவு சொத்து பாத்தியம் என வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியாக நினைவில்லை.

13. நான் வழக்கை ச.எண்.277/2 ற்கு மட்டுமே தாக்கல் செய்துள்ளேன். மேற்படி குறிப்புகளின் படி என் தகப்பனாருக்கு ச.எண்.277/2 ல் ஏக்கர் 1.25 சென்ட் மட்டுமே பாத்தியம் என்றால் சரிதான். நான் எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் ஏக்கர் 1.35 சென்ட் என சொல்லியுள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியாக அளக்காமல் பழைய அளவுகளின் படி போடப்பட்டுள்ளது. தற்போது எந்த அளவுகள் உள்ளது என்பது பற்றி நான் தெரிந்துகொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

14. எனக்கு சொந்தமில்லாத ஏக்கர் 1.35 செண்ட் நிலத்தை வேலி போட்டு பாதுகாத்து அனுபவம் செய்துவருவதாக வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதை தவறு என்றால் சரியல்ல. எனது சித்தப்பா அவருக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் நிலத்தை யாருக்கு எப்போது விற்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. வாசாஆ.2 ஆவணத்தில் எனது சித்தப்பாக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 277/2 ல் 2 ஏக்கரில் உள்ள 80 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளார் என்றால் தவறு.

15. வா.சா.ஆ.2 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் சித்தப்பா விற்றதற்காக தாக்கல் செய்துள்ளேன், என் சித்தப்பா மொத்தம் 2 ஏக்கரை விற்பனை செய்துள்ளார். நான் சொல்வது தவறு என்றும் வா.சா.ஆ.2 ஆவணப்படி என் சித்தப்பா 80 சென்ட் நிலத்தை மட்டும் விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

16. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையின் படி என் தாத்தாவுக்கு ஒதுக்கப்பட்ட ச.எண்.277/2 ல் கண்ட 1 ஏக்கர் நிலத்தை என் அப்பாவும், என் சித்தப்பாவும் எப்போது பாகம் பிரித்து கொண்டனர் என்றால் பாகம் பிரிக்கவில்லை, சரிபாதியாக அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி 1 ஏக்கரில் என் தந்தைக்கு வடபுறமும், என் சித்தப்பாவிற்கு தென்புறமும் தலா 50 சென்ட் வீதம் ஒதுக்கப்பட்டது. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி என்னுடைய சித்தப்பா அவருக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கரில், 80 சென்ட் நிலத்தை பிரதிவாதிகளினுடைய முந்தைய விற்பனையாளருக்கு திருச்சபைக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல, 1 ஏக்கர் 50 சென்ட் நிலத்தை கிரயம் கொடுத்துள்ளார்.

17. மேற்படி ஏக்கர் 1.50 சென்ட் நிலத்தை என் சித்தப்பா விற்பனை செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் சித்தப்பா பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சி-அட்டவணை சொத்தில், 75 சென்ட்டும் அவர்களுடைய தகப்பனாருக்கு பிரிந்த 1 ஏக்கரில் என் சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட

50 சென்ட்டை சேர்த்து பொதுவாக தான் 80 சென்ட் நிலத்தை விற்பனை செய்தார் என்றால் தவறு. என் சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சி-அட்டவணை சொத்தும், என் தாத்தாவின் இறப்பிற்கு பின்னிட்டு வந்த தென்புறம் உள்ள 50 சென்ட் நிலமும் சேர்த்து 80 சென்ட் நிலம் வருகிறது என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

18. 1980 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏ-அட்டவணை சொத்திற்கு வடபுறம், எங்களுடைய தகப்பனாருக்கும், தென்புறத்தில் என்னுடைய சித்தப்பா ஒதுக்கப்பட்டிருந்ததால், என்னுடைய தாத்தாவின் இறப்பிற்கு பின்னிட்டு 1 ஏக்கர் சொத்துக்களை நாங்கள் வடபுறமும், என் சித்தப்பா தென்புறமும் வைத்து கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் பி-அட்டவணை சொத்தில் 2 ம் அயிட்ட சொத்தில் மட்டுமே உரிமை உள்ளது என்றும், தாவாவில் 75 சென்ட் என்று குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 75 சென்ட் நிலம் ஏற்கனவே விற்கப்பட்டது.

19. தாவாவில் குறிப்பிட்டுள்ள 75 சென்ட்டிற்கு உண்டான நான்கு எல்லை விவரங்கள், வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பி-அட்டவணையின் 2 ம் அயிட்ட சொத்தின் நான்கு எல்லை உடன் ஒத்துப்போகிறது என்றால் தவறு. நாங்கள் விற்பனை செய்ததாக குறிப்பிட்டுள்ள 70 சென்ட் நிலம் தாத்தாவின் சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்துக்கள் என்று சொன்னால் தவறு. நான் தாவா சொத்து விவரத்தில் 1 ஏக்கரில் வடபுறம், சரிபாதி 50 சென்ட் பூமிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

20. தாவா 1 ம் அயிட்ட சொத்தில், 0.75 சென்ட்டில், 0.70 சென்ட் மட்டுமே எனக்கு பாத்தியம் என்றும், 2 ம் அயிட்ட சொத்தில் வடபுறம் சரிபாதி 50 சென்ட் என்பதில் விற்பனை செய்தது போக மீதம் உள்ள சொத்தில் மட்டுமே எனக்கு உரிமை உள்ளது என்றால் தவறு. பிரதிவாதிகளுக்கு ச.எண்.277/2 ல் கிரய ஆவணங்களின் மூலமாக தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் பூமியை ஆக்கிரமிப்பு செய்து ரோடு அமைக்க முயற்சி செய்து வருகிறார்கள். மேற்படி சர்வே எண்ணில் பாத்தியமில்லாமல் சாலை அமைக்க முடியாது என்றும், வழக்கிற்காக

மேற்படி சர்வே எண்ணில் பிரதிவாதிகளுக்கு சொத்து பாத்தியம் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

21. வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி என் சித்தப்பா விற்பனை செய்த சொத்துக்களை வழித்தடத்திற்காக பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். என் சித்தப்பாவின் சொத்து மட்டும் அல்லாமல் இதர நபர்களிடம் இருந்தும், வழித்தடத்திற்காக பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.277/2 ல் என்னையும், என் சித்தப்பாவையும் தவிர இதர நபர்களுக்கும் பாத்தியம் உள்ளது என்றால் தெரியாது. எனது சொத்திற்கு தென்புறம் உள்ள 80 சென்ட் நிலத்தை தான் பிரதிவாதி வழித்தடத்திற்காக கிரயம் பெற்றார் என்றால் அது தவறு.

22. நான் காவல் நிலையத்தில் வழித்தடம் பற்றி புகார் எதுவும் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.3, பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் விசாரணைக்காக வந்த அழைப்பாணை என்றால் சரிதான். வா.சா.ஆ-3 விசாரணைக்கு 07.04.2022 ம் தேதியில் ஆஜராகும்மாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தை மறைப்பதற்காக அவசர கதியில் 06.04.2022 ல் என் தம்பியால் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது தவறு. வா.சா.ஆ.4 ல் பிரதிவாதி நிறுவனம் எப்போது என் சொத்தை சேதப்படுத்தினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

23. பிரதிவாதி நிறுவனத்தை சேர்ந்தவர்கள் தான் சேதப்படுத்தினார்கள் என வா.சா.ஆ.4 ல் குறிப்பு இல்லை என்றால் பிரதிவாதிகள் யார் என்று அப்போது அடையாளம் தெரியாது, அதனால் குறிப்பிட்டு சொல்லவில்லை. வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் முத்திரைத்தாள்களில் என்னுடைய பெயரோ என்னுடைய சகோதரர்களின் பெயரோ இல்லை என்றும், வேறு நபர்களின் பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணப்படி காவல் நிலையத்தில் என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் எதுவும் இல்லை.

24. காவல் நிலைய விசாரணையின் போது வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் கோரும் விஸ்தீரணம் முறையாக இல்லாத காரணத்தால் தான் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தவறு. பிரதிவாதிகளுக்கு சாதகமாக இருந்தனர், எங்களுக்கு பாதகமாக இருந்தனர். நான் முறையான ஆவணம் தாக்கல் செய்திருந்தால் முறைப்படி விசாரணை நடைபெற்றிருக்கும் என்றால் சரியல்ல. நான் காவல் நிலைய விசாரணைக்கு முறையாக ஒத்துழைக்காமல் வா.சா.ஆ.5 அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

25. வா.சா.ஆ.5 அறிவிப்பு தேதி 08.04.2022 ஆகும். என்னை விசாரணைக்கு அழைத்த தேதிக்கு மறுநாள் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு என்னுடைய அனுமதியின் பெயரில் தான் அனுப்பப்பட்டது, அதில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ள சொத்து விவரத்திற்கும், தாவாவில் சொல்லியுள்ள சொத்து விவரத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் தெரியவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் அயிட்டம் 1ல் 0.70 சென்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அயிட்டம் 2 ல் இதில் ஏக்கர் 1ல் சரிபாதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

26. வழக்குரையில் அயிட்டம் 1ல் 0.75 சென்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அயிட்டம் 2ல் இதில் ஏக்கர் 1 ல் வடபுறம் சரிபாதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முன்னுக்குப்பின் முரணாக உள்ள வழக்கறிஞர் அறிவிப்பு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே, அதை அடிப்படையாக கொண்டு தாக்கல் செய்த ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் தவறு. வா.சா.ஆ.11 புகைப்பட நகல் 07.05.2022 தேதியன்று எடுக்கப்பட்டவை என்றால் சரிதான்.

27. புகார், வழக்கறிஞர் அறிவிப்பில் ஏப்ரல் மாதத்தில் பிரதிவாதி, வாதியின் சொத்தை சேதப்படுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் வா.சா.ஆ.11 ல் 07.05.2022 தேதியன்று எடுக்கப்பட்ட புகைப்படம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அது வழக்கிற்கு ஏற்புடையதல்ல என்றால் தவறு. தாவா சொத்தில் வாதிகள் ஒருபோதும் கூட்டு

அனுபவத்தில் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு, அப்பா பெயரில் தான் சொத்து உள்ளது. தாவாவில் சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

28. பிரதிவாதி நிறுவனம் 2013 ம் ஆண்டிலேயே வழித்தடத்திற்காக கிரயம் பெற்றுள்ளனர் என்றும், நாங்கள் 2022 ல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் 2021 ம் ஆண்டில் தான் கிரயம் பெற்றனர். 2013 ம் ஆண்டிலேயே ஊராட்சி மன்ற தலைவருக்கு வழித்தடம் தானமாக வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறு, அது பேரூராட்சி ஆகும். நான் வழக்கு சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்திருந்தால் பிரதிவாதியின் முந்தைய விற்பனையாளர் கிரயம் பெற்ற ஆவணங்களும், பிரதிவாதி கிரயம் பெற்ற ஆவணங்களும், வழித்தடத்திற்கு ஊராட்சி மன்ற தலைவருக்கு தானம் கொடுத்தது தெரியவந்துவிடும் என்பதால் வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு.

29. பிரதிவாதி நிறுவனத்திற்கு எதிராக சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் பெற வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. முன்னுக்குப் பின் முரணான ஆவணங்களை கொண்டும், தாக்கல் செய்த இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், பிரதிவாதி ஒருபோதும் என்னுடைய அனுபவ சுவாதீனத்தில் உள்ள சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் ஆக்கிரமிப்பு செய்யவில்லை எங்களுடைய வேலியை உடைத்து ரோடு அமைக்க முயற்சி செய்தார்கள்.ரோடு அமைக்க 2013 லேயே ஊராட்சி மன்ற தலைவருக்கு தானமாக கொடுக்கப்பட்டது என்றும், பிரதிவாதிகள் வேலிகளை உடைத்து ரோடு அமைக்க முயற்சி செய்தார்கள் என்று சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur